16.072025

EA.02/2024 in EP.103/2020 in O.S.No.607/2014

RW1- கல்யாணி– க/பெ.தேவராஜ்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.07.025.

குறுக்கு விசாரணை : (மனுதாரர் தரப்பில்)

1. என் கணவர் என்னுடன் தான் ஆரம்பம் முதலே வசித்து வருகிறார்.

2. அசல் வழக்கு 607/2014 தாக்கல் செய்யும் போது நானும் என் கணவரும் பெங்களூரில் தான் வசித்து வந்தோம் என்றால் சரிதான்.

3. என் கணவர் அ.வ.607/2014 வழக்கில் குறிப்பிட்டுள்ள முகவரி பெங்களூரில் உள்ள முகவரி இல்லை என்றும் வேறு முகவரி உள்ளது என்றால் சரிதான் அந்த முகவரியானது எங்களுக்கு பாத்தியப்பட்ட மற்றொரு வீடாகும்.

4. அ.வ.607/2014 வழக்கின் பிராதில் குறிப்பிட்டுள்ள முகவரியை பொறுத்து எனக்கோ என் கணவருக்கோ அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை வீட்டு வரி மட்டும் உள்ளது.

5. மனு சொத்தானது சொர்ணமுத்துநாயகி என்பவருக்கு பாத்தியம் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

6. ஆவணம் இல்லாத நிலையில் எவ்வாறு என் கணவர் சொர்ணமுத்து நாயகி மீது மனு சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சொர்ணமுத்து நாயகி மனு சொத்தை அனுபவம் செய்வதால் வழக்கு தாக்கல் செய்தார். அனுபவம் செய்தார் என்பதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை.

7. அசல் வழக்கு.607/2014 வழக்கில் என்ன ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் என் கணவருக்கு சொர்ணமுத்து நாயகி எழுதி கொடுத்த ஒரு கிரைய ஒப்பந்தம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கிரைய ஒப்பந்த தேதி மற்றும் வருடம் தெரியுமா என்றால் தெரியாது. கிரைய ஒப்பந்தத்தை முடித்து வைக்கக் கோரி சொர்ணமுத்து நாயகியிடம் என் கணவர் எப்போது கேட்டார் என்றால் நான் பெங்களூரில் இருந்து தென்காசிக்கு வரும் சமயம் எல்லாம் கேட்போம் உடனடியாகக் கேட்டோம்.

8. கிரைய ஒப்பந்தத்தின் படி அனுபவம் என் கணவர் வசம் வரவில்லை. கிரைய ஒப்பந்தமானது என் கைவசம் தான் உள்ளது அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

9. கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் என் கணவருக்கு தீர்வை ரசீது போடப்பட்டதா என்றால் இல்லை.

10. அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் வழக்கு முடிந்த பின் என் கணவரால் திருப்பி வாங்கப்பட்டது என்றால் அது பற்றி என் கணவருக்கு தான் தெரியும்.

11. வழக்கு பிராதில் என் கணவர் பெயரில் தீர்வை ரசீது மனு சொத்திற்கு உள்ளது எனக் கூறி ம.சா.ஆ.9 பிராதில் காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தீர்வை ரசீது அசல் எங்கு உள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. வழக்கு விவரம் பற்றி என் கணவருக்கு தான் தெரியும் என்பதால் அவரைக் கேட்டால் தான் அ.வ.607/2014 வழக்கில் என்ன நடந்துள்ளது, என்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டது, என்ன ஆவணங்கள் திருப்பி பெறப்பட்டன அசல் ஆவணங்கள் எங்கு உள்ளது என்ற விவரங்கள் தெரியும் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

12. அசல் வழக்கு என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டது மற்றும் பிராது சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியும்.

13. அசல் தாவாவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கிரைய ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையொப்பம் போட்டேனா என்றால் எனக்கு நினைவில்லை.

14. கிரைய ஒப்பந்த சங்கதிகள் பற்றி நேரடியாகத் தெரியுமா என்றால் படித்து பார்த்து தெரிந்துகொண்டேன்.

15. சொர்ணமுத்து நாயகிக்கும், என் கணவருக்கும் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஒப்பந்த உடன்படிக்கையின் போது என் கணவர் என்ன ஆவணங்களை பார்வையிட்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

16. கிரைய ஒப்பந்த காலத்தில் சொர்ணமுத்து நாயகி என் கணவருக்கு அனுபவம் ஒப்படைத்ததாக ம.சா.ஆ.9 பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

17. கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட அன்றே முழு கிரையத் தொகையும் பைசல் ஆகியதாக கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

18. கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட நாள் அன்று என் கணவர் எங்கிருந்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

19. முழு கிரையத் தொகையும் பைசல் ஆகிவிட்ட நிலையில் ஏன் அன்றைய தினமே கிரையம் பதிவு செய்யவில்லை என்றால் சொர்ணமுத்து நாயகி கிரையம் செய்ய காலஅவகாசம் கோரியதால் பதிவு செய்யவில்லை. இந்த சங்கதிகள் ம.சா.ஆ.9 பிராதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

20. ம.சா.ஆ.9 பிராது முழு சங்கதிகளும் தெரியாது ஓரளவு தெரியும்.

21. கிரைய ஒப்பந்த தேதியில் இருந்து எவ்வளவு நாட்களுக்குள் கிரையம் செய்ய அசல் வழக்கின் பிரதிவாதி மறுத்தார் என்றால் எனக்கு குறிப்பாகத் தெரியாது. ஒப்பந்த தேதியில் இருந்து எவ்வளவு காலம் கழித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் தெரியாது மற்றும் 1 வருடம் கழித்து தாக்கல் செய்யப்பட்டது என்று கூறுகிறார்.

22. அசல் வழக்கு பிராதில் அனுபவம் ஒப்படைத்ததாக குறிப்பிடப்பட்டும் தேசிய மக்கள் நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட தீர்ப்பாணையில் மனு சொத்தின் அனுபவம் சொர்ணமுத்து நாயகியிடம் இருப்பதாக முரணாக உள்ளது என்றால் நாங்கள் வெளியூரில் இருந்ததால் மீண்டும் சொர்ணமுத்து நாயகியே பயிர் செய்தார். என் சாட்சியமே இந்த கேள்விக்கு முன் பின் முரணாக இருப்பதால் என் சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

23. சொர்ணமுத்து நாயகி அசல் நிறைவேற்றுகை மனுவில் தாக்கல் செய்த ஆட்சேபனை விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த ஆட்சேபனையில் மனு சொத்தின் அசல் உரிமையாளர் வள்ளித்தாய் எனவும் குறிப்பிட்டுள்ளார் என்றும் மோசடியாக ஏமாற்றி நீதிமன்றத்தில் தீர்ப்பாணை பெறப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

24. சொர்ணமுத்து நாயகி எனது உடன் பிறந்த சகோதரி ஆவார்.

25. சொர்ணமுத்து நாயகிக்கு படிப்பறிவு இல்லாததால் அவரை ஏமாற்றி வள்ளித்தாயின் சொத்தை அபகரிப்பதற்காக மோசடியாக ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி அதன் மூலம் மோசடி தீர்ப்பு பெற்று அதை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கிறேன் என்றும் மனு சொத்து வள்ளித்தாயிக்கு பாத்தியமானது என்பதால் என் நிறைவேற்றுகை மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

26. இந்நீதிமன்றத்தில் இருந்து கிரைய ஆவணத்தை பதிவு செய்ய சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பி சுரண்டை சார்பதிவாளர் கிரையம் செய்ய முடியாது என திருப்பிவிட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். அதன் பேரில் மாவட்ட பதிவாளரிடம் மேல்முறையீடு செய்யப்பட்டது. அதற்கான ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்வேன்.

27. அசல் வழக்கானது ஒப்பந்த தேதியில் இருந்து உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யாததால் அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ளதால் மேற்படி தீர்ப்பாணையானது செல்லத்தக்க தீர்ப்பாணை இல்லை என்றும் அந்த தீர்ப்பாணையின் பேரில் நிறைவேற்றுகை நடவடிக்கை எடுக்க முடியாது என்றால் சரியல்ல.

28. அசல் ஒப்பந்தத்தை பார்வையிட்டால் தான் ஒப்பந்த காலக்கெடு மற்றும் பிராது தாக்கல் தேதி ஆகிய விவரங்கள் தெரியும் என்றும் அசல் ஒப்பந்தமானது இம்மனுவிற்கு அவசியமானது என்றும் நான் ஒப்பந்தத்தை தாக்கல் செய்தால் மனுவிற்கு எதிராக இருக்கும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

29. கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டபோதே அனுபவம் ஒப்படைத்தும் முழு கிரைய தொகையும் பைசல் செய்திருந்தால் கிரைய ஒப்பந்தத்தில் 3 வருட காலம் என கால நிர்ணயம் செய்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

30. எனவே பிராது சங்கதிகள் மற்றும் ஒப்பந்தம் சங்கதிகள் பொய்யானது என்றால் சரியல்ல.

31. மனு சொத்து எப்போதும் சொர்ணமுத்து நாயகியின் அனுபவத்திலோ, என் கணவரின் அனுபவத்திலோ இருந்ததில்லை என்றும் நாளது வரை மனு சொத்தானது வள்ளித்தாய் அனுபவத்திலும் அவரது முன்னோர் அனுபவத்திலும் தான் உள்ளது என்றும் மனு சொத்தில் உரிமை மூல ஆவணமும் வள்ளித்தாய் பெயரில் உள்ளதால் மனுதாரரின் மனு அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

32. நான் என் சகோதரியுடன் கூட்டு சதி சேர்ந்து வள்ளித்தாய் சொத்தை அபகரிக்க பொய்யான ஒரு கிரைய ஒப்பந்தத்தை மோசடியாக தயார் செய்து அதன் பேரில் தவறான தீர்ப்பாணை பெற்றுள்ளதால் மேற்படி தீர்ப்பாணை சட்டப்படி நிறைவேற்றத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி தீர்ப்பாணையின் அடிப்படையில் அசல் நிறைவேற்றுகை மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல எனவும், நீதிமன்றம் என் கணவருக்கு கிரைய பதிவு செய்ய வேண்டும் என பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டியது அவசியம் என்றும் சொன்னால் சரியல்ல.

33. இந்த வழக்கில் என் கணவர் சாட்சியம் சொன்னால் முழு விவரமும் தெரியவரும் என்பதால் தான் நான் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றும் எனவே மனுதாரரின் மனு அனுமதிக்கப்பட்டு அசல் நிறைவேற்றுகை மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>

இல்லை

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி.